பவித்ரன் அகாடமி

TNPSC, TNTET, POLICE EXAM & TUITION CENTER

வகுப்பு : XII **1 – 1 / 3 – தமிழ்** **மதிப்பெண்கள் : 90**

I **சரியான விடை தருக** **14 × 1 = 14**

1 இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் _____

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் _____

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

4. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது _____

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

5. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது _____

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

6. "உவா உற வந்து கூடும்

உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்? _____

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

7. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க. _____

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

8. தமிழில் திணைப்பாகுபாடு _____ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

9. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் _____

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

10. பிழையான தொடரைக் கண்டறிக. _____

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

11. கவிதையின் இயங்காற்றல் தான் _____

அ) சொல் ஆ) பொருள் இ) நடை ஈ) தலைப்பு

12. இங்கிலாந்தைச் சேர்ந்த அறிவியல் கருத்தாளர் _____

அ) வால்ட் டிஸ்னி ஆ) எர்னஸ்ட் இ) டேவிட் ஹஸ்ஸி ஈ) டேவிட் கிங்

13. கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயர் _____

அ) கம்பராமாயணம் ஆ) இராம சரிதம் இ) இராம வரலாறு ஈ) இராமாவதாரம்

14. குடும்பம் என்னும் சொல் முதன்முதலில் இடம்பெற்றுள்ள நூல் _____

அ) சிலப்பதிகாரம் ஆ) திருக்குறள் இ) கம்பராமாயணம் ஈ) அகநானூறு

II. அ) எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளி. **3 × 2 = 6**

15. அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?

16. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

17. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

18. அய்யப்ப மாதவன் இயற்றிய கவிதை நூல்கள் யாவை?

19. கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்களின் எண்ணிக்கை யாவை?

ஆ) எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை தருக.

www.Padasalai.Net

20. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

21. பசுமைக்குடில் வாயுக்கள் யாவை?

22. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.

23. சங்க இலக்கியத்தில் குடும்ப அமைப்போடு தொடர்புடைய சொற்கள் பற்றி கூறுக.

III. எவையேனும் **ஏழு** வினாக்களுக்கு விடையளி **7 × 2 = 14**

24. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக

அ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

ஆ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

25. வல்லின மெய்களை **இட்டும் நீக்கியும்** எழுதுக.

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

26. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

27. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) விலை, விளை, விழை (**அல்லது**) ஆ) கலை, களை, கழை

28. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக்கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

29. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

அ) கிணற்றுத்தவளைபோல (**அல்லது**) ஆ) உள்ளங்கை நெல்லிக்கனிபோல.

30. ஏதேனும் **ஒன்றனுக்கு** புணர்ச்சி விதி தருக.

அ) புதுப்பெயல் (**அல்லது**) ஆ) அருங்கானம்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

31. ஏதேனும் **ஒன்றனுக்கு** உறுப்பிலக்கணம் தருக

அ) பொலிந்தான் (**அல்லது**) ஆ) சாய்ப்பான்

32. கலைச்சொல் தருக.

அ) Subscription ஆ) Metro Train

IV. அ) எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடையளி **2 × 4 = 8**

33. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

35. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

36. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

ஆ) எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடையளி. **2 × 4 = 8**

37. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் -விளக்குக.

38. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்கம் எழுதுக.

39. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

40. தாய்வழிக் குடும்பம் பற்றி விவரி.

V. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளி. **3 × 4 = 12**

41. இலக்கிய நயம் பாராட்டுக. **பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றை எழுதுக.**

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்

உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.
- நாமக்கல் கவிஞர்

42. **தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its owner everywhere.
2. A new language is a new life.
3. If you want people to understand you, speak their language.
4. Knowledge of languages is the doorway to wisdom.

43. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

(**அல்லது**)

கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

44. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.

VI. அ) **நெடுவினா** **3 × 6 = 18**

45. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

(**அல்லது**)

பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

46. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

(**அல்லது**)

கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

47. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(**அல்லது**)

'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்..... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

ஆ) **மனப்பாடப்பாடல்**. **4 + 2 = 6**

48. அ) 'வையகம் பனிப்ப ' - எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

ஆ) நன்றி – எனத் தொடங்கும் குறளை எழுதுக.

"முயற்சி திருவினையாக்கும் ....

முயன்றால் முடியாதது எதுவும் இல்லை..."

_____ தேர்வில் அனைவரும் வெற்றி பெற வாழ்த்துகள் _____

தயாரிப்பு :

பவித்ரன் அகாடமி

TNPSC, TNTET, POLICE EXAM & TUITION CENTER

சு. விவேக் M.A., M.PHIL., B.ED.,

முதுகலைத் தமிழாசிரியர்

CONTACT : 99421 – 83143 : 79041 – 44418

MAIL ID : vivekvicky20688@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net